அதிலே சம்பந்தப்பட்ட ஆறுகள் நாட்டாறு, தென்கோரையாறு, வட கோரையாறு, அரசலாறு, நூலாறு, கீர்த்தமான் ஆறு, வாஞ்சியாறு போன்ற ஆறுகள், அதனுடைய கிளை வாய்க்கால்கள் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுக்காலமாகத் தூர் வாரப்படாமல் மேடாகிப் பாசனம் செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பிரத்தியேக அனுமதி கொடுத்து அரசாங்கத்தின் மூலமாக வழக்கு தொடர்ந்து நடக்கட்டும். பொதுப்பணித் துறை மூலமாக இந்தாண்டு வேலை செய்வதற்கு பிரத்தியேக அனுமதி அரசு வழங்குமா, வழங்க வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்வதோடு, அமைச்சர் அவர்கள் மூலமாக அதற்கான பதிலையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கால்வாய்கள், இந்த வழக்கை முன்னிட்டு தூர் வாரப்படாமல் இருக்கின்றன என்ற செய்தி அறிந்து நானே அந்த வாய்க்கால்களைச் சென்று பார்வையிட்டேன். வழக்கு ஒரு பக்கத்திலே நடக்கட்டும், அதிலே நமக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்தில்லை. அந்த வாய்க்கால்களைத் தூர் வார, காட்டாமணியை வெட்டுகிற வேலையைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். அதற்கு வேண்டிய முயற்சிகளில் அரசு இறங்கியிருக்கின்றது.

பாலம் கட்டுதல்

* 3317 திரு. எம் தங்கவேல் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், முசிறி தொகுதியில் சமயபுரம் அருகே உள்ள மாணிக்கபுரத்தில் பாலம் கட்டும் பணி எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலம் அமைக்கும் பணிகளை குளித்தலை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தொழில் பட்டறை மூலம்செய்வதற்காக பணி ஆணை (work order) மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரால் அளிக்கப்பட்டுள்ளது.